வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 3865 /ஆ4/ 2023, நாள்.15.02.2024
– – –

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மேல்நிலை பொதுத் தேர்வுகள் மார்ச்–2024 –சார்பாக துறை அலுவலர்கள் ,வழித்தட அலுவலர்கள் ,பறக்கும் படை உறுப்பினர்கள் – முதுகலை ஆசிரியர்கள்– முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையிலான தேர்வுகள் சார்ந்த கூட்டம் நடத்துதல் சார்ந்த முதுகலை ஆசிரியர்களை விடுவித்து அனுப்புதல்– தொடர்பாக

=========

நடைபெறவுள்ள மார்ச் –2024 மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் சார்ந்து வேலூர் மாவட்டத்தில் துறை அலுவலர்கள் ,வழித்தட அலுவலர்கள் ,பறக்கும் படை உறுப்பினர்கள் ஆயத்தக் கூட்டம் இணைப்பில் காணும் அட்டவணையின் படி நடைபெறவுள்ளது .

எனவே அனைத்து அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல / மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள இணைப்பில் காணும் பாட முதுகலை ஆசிரியர்களுக்கு முன் ஆயத்தக்கூட்டம் வேலூர்,சத்துவாச்சாரி, ஹோலி கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கூட்ட அரங்கில் 17.02.2024 (சனிக்கிழமை) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் சார்ந்த முதுகலை ஆசிரியர்களை கலந்து கொள்ள ஏதுவாக பணியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு இணைப்பில் காணும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. **மேலும் அரசு மேல்நிலைப்பள்ளி வள்ளிமலை தலைமையாசிரியரும் மற்றும் காங்கேயநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியரும்** இக்கூட்டத்தில் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பிப்ரவரி –2024**
**மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள்ஆயத்தக் கூட்டம்**
**நாள் .17.02.2024**

| வ. எண் | மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள் | நாள் மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல / மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள் | **17.02.2024** பிற்பகல் 2.00 மணி முதல் 3.30 வரை | ஹோலி கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி. சத்துவாச்சாரி,வேலூர். |

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர் ,
வேலூர் .

பெறுநர்
அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.
நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் /தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.